9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

99. எந்தத் தேதியிலிருந்து தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரி (கூடுதல் வரி) திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்பது குறித்து 4-6-1981-ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 629—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு விற்பனை வரி (கூடுதல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

100. சென்னை—17ல் உள்ள பாலமந்திரின் (அனாதைக் குழந்தைள் மருத்துவமனை) தச்சுப்பட்டறைத்தொழிற்பிரிவு விற்பனை செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 15-6-1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள் - அறக்கட்டளைகள் துறையின் 670ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொதுவிற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

101. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 1508 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

102. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான விதிகளில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 23-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 35 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

103. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2-2-1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 215 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

104. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு கிடங்குச் சட்டத்தில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 9-6-1981 ஆம் தேதியிடப் பெற்ற உணவு—கூட்டுறவுத் துறையின் 468 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு கிடங்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.